இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 15 – செவ்வாய்க்கிழமை 01 செப்டம்பர் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 22 : Thiruvalluvar Year - 2057 - Aavani 15 - Tuesday 01 September 2026 - Dak 8 Pages ₹ 5.00

### சர்வதேச தரத்தில் விளையாட்டு வீரர்களை உருவாக்க செம்மஞ்சேரியில் அமைக்கப்பட்ட

# ‘குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’ திட்டத்தை ரத்து செய்வதா?

## சட்டப் பேரவையில் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, செப். 1 -**

**“சர்வதேச தரத்தில் விளையாட்டு வீரர்களை உருவாக்க செம்மஞ்சேரியில் அமைக்கப்பட்ட ‘குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’ திட்டத்தை ரத்து செய்தது ஏன்?” என்று சட்டப் பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பினார்.**

சட்டப் பேரவையில், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எங்கள் தலைவர் தலைமையிலான ஆட்சியில், தமிழ்நாட்டில் இருந்து ஒலிம்பிக் தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்க, சென்னையில் ஒரு இன்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு விளையாட்டுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று, செம்மஞ்சேரியில் 128 ஏக்கரில் 261 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு `குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’ அமைக்கின்ற பணிகளை, நாங்கள் தொடங்கி இருந்தோம்.

இந்த அரசு, எப்படி பரந்தூர் விமான நிலையத்தை ரத்து செய்ததோ, அதே போல் இப்போது `குளோபல்ஸ்போர்ட்ஸ் சிட்டி’ திட்டத்தையும் ரத்து செய்திருக்கிறது என்று செய்திகள் வந்திருக்கின்றன.



அரசின் கவனத்திற்கு ஈர்க்கிறேன். ஏன், இந்த திட்டம் கைவிடப்பட்டது என்று, இந்த அரசைக் கேட்கிறேன்.

**128 ஏக்கர் நிலம் சென்னைக்கு அருகில் கிடைப்பது அரிது!**

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் தேர்தல் அறிக்கையில், இதைச் சொல்லியிருந்தோம். 128 ஏக்கர் சென்னைக்கு அருகில் கிடைப்பது என்பது சாதாரண விஷயம் கிடையாது. மூன்று இடங்களுக்கு சாத்தியக்கூறு இருந்தது. நாங்களும் டி.பி.ஆர் ப்ராஜெக்ட் எல்லாம் தயார் செய்திருந்தோம். சி.எம்.டி.ஏ சார்பாக ஒரு தனியார் கன்சல்டன்ட் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த கன்சல்டன்ட் ஆய்வின்படிதான் செம்மஞ்சேரியில் `ஸ்போர்ட்ஸ் சிட்டி’ அமைக்கலாம் என்று அறிக்கை கொடுத்தார்கள். அதன் பிறகு தொடர்ந்து பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியிருக்கிறோம்.

`ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன், ஸ்போர்ட்ஸ்மேன்களுடன் கலந்து ஆலோசனை செய்திருக்கிறோம். ஹை லெவெல் சைட் இன்ஸ்பெக்சனும் நடத்தப்பட்டது. அந்த இன்ஸ்பெக்சனின் அடிப்படையில் பல்வேறு பரிந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

**எங்களின் தலைவர், திட்டத்தைத் தொடங்கி வைத்தார்!**

`குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’ அமைக்கின்ற பணியை பேஸ் மேனரில் மூன்று பேஸ்களாக நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அது இறுதி செய்யப்பட்டது. பேஸ் ஒன்றுக்கான வேலையை எங்களின் தலைவர், அப்போதைய முதலமைச்சராக இருக்கும் போது, கடந்த பிப்ரவரி 18ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக `பி.எம்.எக்ஸ் சைக்கிளிங் டிராக்’, இந்தியாவிலேயே மிகப்பெரிய `வாட்டர் ஸ்போர்ட்ஸ் ஸ்பெசிலிட்டி’ என்று 25 விளையாட்டுகளுக்குத் தேவையான 30 க்கும் மேற்பட்ட உட்கட்டமைப்புகள் அங்கு வர இருந்தன. முதற்கட்டப் பணிகளை 18 மாதங்களில் முடிக்க வேண்டும் என்று அவர்களுக்கு இலக்கு கொடுக்கப்பட்டது. இப்போது நம் அமைச்சர் அவர்களும் இந்தத் திட்டத்தை கைவிடவில்லை, இதில் சில ஆல்ட்ரேஷன் செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இதை தயவுசெய்து சீக்கிரம் செய்து முடித்தால், விளையாட்டு வீரர்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

**அவை முன்னவர் செங்கோட்டையனிடம் கேளுங்கள்!**

பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல வருடங்களாக விளையாட்டுத் துறைக்கு கட்டமைப்புகள் இல்லை என்று சொல்கிறார். பல வருடங்களாக விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்தவர் நம் அவை முன்னவர் அண்ணன் செங்கோட்டையன் அவர்கள்தான். அவரிடத்தில் அதை அவர் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை ஆற்றினார்.

---

### நேபாள பெரு வெள்ளம்:

## பலி எண்ணிக்கை 900ஐ கடந்தது!

### 4 ஆயிரத்து 247 பேர் மாயமாகியுள்ளனர்!

*காத்மண்ட், செப். 1 -*

நேபாள பெரு வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 900ஐ கடந்துள்ளது. 4 ஆயிரத்து 247 பேர் மாயமாகியுள்ளனர்.

திபெத் எல்லையை யொட்டிய நேபாள பகுதியில் கடந்த 26ந்தேதி ஏற்பட்ட பனிச்சரிவால் போடேகோஷி நதியில் பெருவெள்ளம் ஏற்பட்டது. இந்த பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 900ஐ கடந்துள்ளது. வெளிநாட்டினர் 592 பேர் உள்பட 4 ஆயிரத்து 247 பேர் மாயமாகியுள்ளனர். வெள்ளத்தில் சிக்கியவர்களில் 10 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த உடல்கள் மீட்கப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டை சேர்ந்த 100 பேர் உள்பட 275 இந்தியர்களின் நிலை இன்னும் தெரியாததால், அவர்களது உறவினர்கள் கவலை அடைந்துள்ளனர். அதே நேரத்தில், அடையாளம் காண முடியாத 199 உடல்கள் மீட்கப்பட்டன.அந்த உடல்களில் டி.என்.ஏ. மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

ஆய்வின்போது, குடும்பத்தினரின் டி.என்.ஏ. உடன் ஒத்துப்போனால் தோண்டி எடுக்கப்பட்டு உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என நேபாள அரசு அறிவித்துள்ளது. உடல்களை பாதுகாக்க போதிய வசதிகள் இல்லாததால், அவற்றை புதைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

---

### தமிழகம், புதுச்சேரியில்

## செப். 3-ம் தேதி வரை வெப்ப நிலை 5 டிகிரி உயரும்!

*சென்னை, செப். 1 -*

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் செப். 3ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: -

தமிழகக் கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யும். தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். செப்.1, 2ம் தேதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும்.

செப்.3ம் தேதி மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யும்.

---

### மேட்டூர் அணையிலிருந்து 45 நாட்கள் மட்டுமே தண்ணீர் வழங்கினால்

## எந்தவொரு பயிரையும் முழுமையாக விளைவிக்க முடியாது!

### டெல்டா விவசாயிகள் குமுறல்!

**தஞ்சை, செப். 1 -**

**மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக 45 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்படும் என்ற அறிவிப்பு போதுமானதல்ல என்றும், குறைந்தது 120 நாட்கள் தண்ணீர் திறப்பதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என டெல்டா விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

காவிரி டெல்டா பாசனத்திற்காக இன்று மேட்டூர் அணையை முதல்வர் விஜய் திறந்து வைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக தொடர்ந்து 45 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 45 நாட்கள் மட்டுமே தண்ணீர் திறக்கப்படும் என்ற அறிவிப்பு டெல்டா விவசாயிகளிடையே பெரும் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சம்பா சாகுபடியை முழுமையாக முடிப்பதற்கு குறைந்தபட்சம் 120 முதல் 150 நாட்கள் வரை தடையற்ற தண்ணீர் விநியோகம் அவசியம் என்றும் 45 நாட்கள் மட்டுமே தண்ணீர் வழங்கினால் எந்தவொரு பயிரையும் முழுமையாக விளைவிக்க முடியாது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 90 அடியை எட்ட உள்ள நிலையில், சம்பா பருவத்தை முழுமையாகக் காப்பாற்றத் தேவையான நீர்மேலாண்மை நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

இவ்வாண்டு ஜூன் 12ஆம் தேதி அணை திறக்கப்படாததால், ஏற்கனவே குறுவை சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழக அரசு 45 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் தேவை என்று சுருக்கிக் கொண்டால், அதைக் காரணம் காட்டி உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய மாதாந்திர தண்ணீர்ப் பங்கைத் தர மறுக்க கர்நாடக அரசுக்கு அதுவே ஒரு தவறான முன்னுதாரணமாக மாறிவிடும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் சண்முகம் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### த.வெ.க. ஆட்சியில்

## தமிழகத்தில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு!

*சேலம், செப். 1 -*

சேலம் அரிசிபாளையம் பகுதியில், பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டு, உடலை துண்டு துண்டாக வெட்டி, தண்ணீர் தொட்டியில் வீசப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் அரிசிபாளையம் பகுதியைச் சேர்ந்த ரமேஷ், குடும்பத்துடன் வெளியூர் சென்றுவிட்டு வீடு திரும்பிய நிலையில், அவரது வீட்டு குழாயில், துர்நாற்றத்துடன் தண்ணீர் வந்துள்ளது. சந்தேகமடைந்த ரமேஷ், மொட்டை மாடியில் உள்ள 2 தண்ணீர் தொட்டிகளை திறந்து பார்த்துள்ளார். அப்போது, இரண்டு சாக்குப் பை மூட்டைகள் கிடந்துள்ளன. அதிர்ச்சியடைந்த ரமேஷ், காவல்துறையினருக்கு தகவல் அளித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்து போலீசார் தண்ணீர் தொட்டியில் கிடந்த சாக்குப் பையை எடுத்து ஆய்வு செய்த போது, அதில், மனித உடல் பாகங்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டு, மூட்டையாக கட்டி, இரண்டு தண்ணீர் தொட்டிகளிலும் போடப்பட்டிருந்தது தெரியவந்தது.

மேலும், அது பெண்ணின் உடல் பாகங்கள் என்பதும், கொடூரமாக அந்த பெண் கொலை செய்யப்பட்டு, உடலை துண்டு துண்டாக வெட்டி வீசியதும் தெரியவந்தது.

மேலும், உடலின் சில பகுதிகள் இல்லாததால், போலீசார் அப்பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.

அப்போது, மற்றொரு வீட்டின் மொட்டை மாடியில் தண்ணீர் தொட்டிக்கு கீழே மற்றொரு மூட்டை கண்டறியப்பட்டது. அதில், பெண்ணின் எஞ்சிய உடல் பாகங்கள் இருந்துள்ளன. போலீசார் அதனை கைப்பற்றி ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.